**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 106/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 1(LW. 1)**

| | |
|---|---|
| **Name** : தமிழரசன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**4** வது எதிரி ஆஜர் இல்லை.**( 1-3** எதிரிகள் **CC 65/2026** ல் பிடிகட்டளையில் உள்ளனர்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.106 /2018 10.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.10 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சேவியர் நகர் தஞ்சாவூரில் குடியிருந்து அஞ்சலையம்மாள் கல்லூாரியில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். பாண்டிசேரியிலுள்ள எனது மகளின் வீட்டிற்கு நானும் எனது மனைவியும் சென்று விட்டு கடந்த 07.04.2017 ம் தேதி ரயில் நிலையத்திலிருந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது வீட்டின் கதவின்பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது முதல் படுக்கையறையில் உள்ள இரண்டு பீரோக்களும் உடைக்கப்பட்டு அதிலுள்ள பொருள்கள் சிதறிக்கிடந்தன. அதில் வைத்திருந்த ஒரு பவுன் காசு–8 , கால் பவுன் காசு –1 , 3 கிலோ அளவிளான வெள்ளி பொருள்கள் , DVD பிளேயர், ரூ. 15,000/– பணம் ஆகியவைகள் காணமால் போயிருந்தது. பின்பு உடனடியாக கீழவாசல் காவல்நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். சுமார் 1 வருடத்தில் எனது தங்க காசுகள் கண்டுபிடித்து கொடுத்தார்கள். வெள்ளிபொருள்கள், DVD பிளேயர், பணம் ஆகியவை கிடைக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அசா1 புகாரினை எப்போது எழுதி கொடுத்தேன் என்றால் சம்பவத்தன்று மாலை எழுதிகொடுத்தேன். ரூ. 15,000/– பணம் காணாமல் போனது குறித்து புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பணம் காணாமல் போனது உண்மைதான். ஒவ்வொரு தங்க காசுக்களுக்கான தனிப்பட்ட

அடையாளம் குறித்து நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – கனிமொழி., L.L.M,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 106/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 2(LW. 2)**

| | |
|---|---|
| **Name** : செல்வராணி | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**4** வது எதிரி ஆஜர் இல்லை.**( 1-3** எதிரிகள் **CC 65/2026** ல் பிடிகட்டளையில் உள்ளனர்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.106 /2018 10.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.29 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சேவியர் நகர் தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது கணவர் .கடந்த 07.04.2017 அன்று ஊரிலிருந்து வந்து பார்த்தபோது எங்கள் வீட்டின் கேட் பூட்டப்பட்டிருந்தது. வீட்டு வாசலின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது.கதவை தொட்டவுடன் திறந்து கொண்டது. நாங்கள் உள்ளே சென்று பார்த்தபோது முதல் அறையில் உள்ள பீரோவிலிருந்த காசுகள் ஒருபவுன் காசுகள் -8, வெள்ளி பொருள்கள்- 2 1/2 -3 கிலோ , பணம் ரூ. 15,000/- DVD பிளேயர் ஆகியவை காணாமல் போயிருந்தது. பின்பு நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். சுமார் 5-6 மாதங்களில் தங்ககாசுகள் மட்டும் கண்டுபிடித்து கொடுத்தார்கள். சுமார் 9 காசுகள் கண்டுபிடித்து கொடுத்தார்கள். மற்ற பொருள்கள் கிடைக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீஸ் விசாரணையில் ரூ. 15,000/- பணம் காணாமல் போனது சம்மந்தமாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். தங்க காசுகளை வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு கடைகளில் வாங்கியிருந்தோம். தங்க காசுகளில் பொதுவாக அந்த கடையின் முத்திரைகள் இருக்கும் என்றால் சரிதான்.நான் போலீசார் விசாரணையில் தங்க காசுகளின் தனிபட்ட அடையாளம் குறித்து கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – கனிமொழி., L.L.M,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 106/2018**
**U/s. 454,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 3(LW. 4)**

| | | |
|---|---|---|
| **Name** | **:** அசோக்குமார் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | **:** | **Age : /2025** |

**4** வது எதிரி ஆஜர் இல்லை.**( 1-3** எதிரிகள் **CC 65/2026** ல் பிடிகட்டளையில் உள்ளனர்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.106 /2018 10.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.35 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் யாகப்பா நகரில் குடியிருந்து அஞ்சலையம்மாள் கல்லூரியில் உடற்கல்வி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். அசா1, அசா2 ஆகியோரை தெரியும். கடந்த 07.04.2017 ம் தேதி நான் கல்லூரி முடித்து எனது வீட்டிற்கு சென்ற போது அசா1 எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே சென்ற பார்த்ததகாவும், பீரோவில் இருந்த நகை மற்றும் DVD பிளேயர் , புடவைகள் காணாமல் போயிருந்ததாக சொன்னார். பின்பு நானும் அவரது வீட்டிற்கு சென்று பார்த்தேன். பின்பு நாங்கள் கிழக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அசா1 தமிழரசன் என்பவரின் கல்லூரியில் நான் அவருக்கு கீழ் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அசா1 ன் வீடு சேவியர் நகரில் உள்ளது. எனது வீட்டிற்கும் அசா1ன் வீட்டிற்கும் சுமார் 1கிமீ இருககும். சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். அசா1 எனக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்தார். பின்பு நான் அவரது வீட்டிற்கு சென்றேன். பின்பு நாங்கள் சென்று போலீசாரை அழைத்து வந்தோம். அப்போது மாலை சுமார் 6 மணி இருக்கும். அசா1 யை போலீசார் விசாரித்தபோது நான் அவரது வீட்டிற்கு வெளியே இருந்தேன். அவர் வீட்டில் வைத்து புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் அசா1ன் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் அசா1ன் கல்லூரியில் வேலை செய்வதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – கனிமொழி., L.L.M,

நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.